# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

## பல்வகை மனு எண் 1/2019 ன் அசல் வழக்கு எண் 13/05

2019 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17-ம் நாள் புதன் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய PW -1 வது நபரின் வாக்குமூலம், (1969-ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கே.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணிவண்ணன் | வயது | : |
| த/பெ.(அ)க/பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | சாதி | : |
| மாவட்டம் | : | | : |

**முதல் விசாரணை**

இந்த வழக்கில் நான் நீதிமன்ற ஆணையராக நியமிக்கபட்டேன். அந்த உத்தரவையும் வாரண்டையும் நான் பார்த்தேன். முதல்நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் வாரண்டை நிறைவேற்ற வேண்டும் என எனக்கு உத்தரவிடபட்டது. முதல்நிலை தீர்ப்பாணையில் என்ன இருந்தது என படித்து தெரிந்து கொண்டேன். முதல்நிலை தீர்ப்பாணையில் 3வது இனத்தில் திருமணம் மண்டபம் கட்டுவதற்கு கடனாக பெற்ற வகையில் பாரத ஸ்டேட் வங்கியில் நிலுவையில் உள்ள கடன் முழுவதும் உபய வாதிகளால் கட்டி தீர்க்கவேண்டும் என்றும் மேற்படி வங்கி கடனை தவிர்த்து 1ம் பிரதிவாதி அப்துல்கலாம் ஆசாத் தனக்கு தனிபட்ட முறையில் பாத்தியபட்ட சொத்துக்களை விற்றும் மற்றும் சிலரிடம் கடனாக தனிபட்ட முறையில் கடனாக பெற்றும் திருமண மண்டபத்தை கட்டிமுடித்துள்ளார். அந்தவகையில் 1ம் பிரதிவாதியால் மொத்தம் செலவு செய்யபட்ட தொகை ரூ.42 இலட்சம் என்று உபய வாதிகளால் ஒப்புக்கொள்ளபடுகிறது. தாவா சொத்துக்களில் ஏதாவது ஒரு சொத்தை விற்று கடனை அடைக்க வேண்டும் என்று முதல்நிலை தீர்ப்பாணையில் உள்ளது. முதல்நிலை தீர்ப்பாணையில் 1ம் பிரதிவாதியால் மேற்கண்டவாறு செலவு செய்யபட்ட ரூ.42 இலட்சத்தை 1வது பிரதிவாதிக்கு

செலுத்தி தீர்த்துவிடவேண்டியது என்று சொல்லபட்டுள்ளது என்றால் சரி தான். எனக்கு அளித்த வாரண்ட் படி ரூ.42 இலட்சத்தை ரொக்கமாகவும் கொடுக்கலாம், சொத்தாகவும் கொடுக்கலாம். இறுதிநிலை தீர்ப்பாணையில் மனு செய்யும்போது ரூ.42 இலட்சத்திற்கான சொத்தை 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கிவிட்டு இதர சொத்துக்களை பாகம் பிரிக்க மனு செய்தார்களா என்று எனக்கு தெரியாது. இறுதிநிலை தீர்ப்பணையில் பிறப்பிக்கபட்ட உத்தரவில் முதல்நிலை தீரப்பாணையில் சொல்லபட்ட சரத்துக்களை நிறைவேற்றி எஞ்சிய சொத்துக்களை மட்டும் பாகம் பிரிக்க உத்தரவிட்டுள்ளார்கள் என்றால் சரி தான். நான் இருதரப்பினருக்கு அறிவிப்பு கொடுத்தபோதும் பிரதிவாதி தரப்பில் எனக்கு ஒத்துழைப்பு தர மறுத்துவிட்டார்கள். ரூ.42 இலட்சம் பணம் கொடுத்தபிறகு இடத்திற்கு போகலாம் என்று பிரதிவாதிகள் இருந்தார்கள் என்றாலும் அதற்குள் நான் சொத்து மதிப்பீட்டுள்ளாரை நான் நிர்ணயம் செய்துவிட்டேன் என்றால் ரூ.42 இலட்சம் பணம் கொடுத்தபிறகு இடத்திற்கு போகலாம் என்று பிரதிவாதிகள் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரிந்திருந்தால் நான் இடத்திற்கு சென்றிருக்க மாட்டேன். என் தம்பி சிவில் இன்ஜினியர் அவர் சொன்னதன் அடிப்படையில் நான் மதிப்பீட்டாளரை நிர்ணயம் செய்தேன். மதிப்பீட்டாளருக்கு எவ்வளவு, எப்படி கட்டணம் செலுத்தினேன் என்பது மறந்துவிட்டது. இறுதிநிலை தீர்ப்பாணை மனுதாரர்கள் கொடுத்தார்களா என்றும் நினைவில்லை. தாவா சொத்து பிரதான இடத்தில் அமைந்து இருந்ததால் நாங்கள் சென்றவுடன் கூட்டம் கூடிவிட்டது. அங்கிருந்தவர்களில் எனக்கு தெரிந்தவர்களிடம் சொத்தின் மதிப்பை கேட்டு பிரமாண வாக்குமூலமும் பெற்று கொண்டேன். பிரமாண வாக்குமூலத்தை என் கைபட எழுதினேன். எங்கே வைத்து எழுதினேன் என்பது தற்போது ஞாபகமில்லை. கையெழுத்து எங்கே போட்டு கொடுத்தார்கள் என்பது தற்போது ஞாபகமில்லை. பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்திட்டவர்கள் நோட்டரி பப்ளிக் முன்னிலையில் தான் கையொப்பமிட்டார்கள். ஆனால் நோட்டரி பப்ளிக் அலுவலகத்தில் வைத்து கையொப்பமிட்டார்களா அல்லது வேறு எங்கேயாவது கையொப்பமிட்டார்களா என்பது எனக்கு தற்போது ஞாபகமில்லை. வங்கியில் எவ்வளவு கடன் பாக்கி இருக்கிறது என்று தபால் மூலம் கேட்டேன். ரூ.2,70,200/- பாக்கி இருப்பதாக சொன்னார்கள். 1ம் பிரதிவாதி ஒத்துழைக்காததால் வங்கி பாக்கி

சொன்னதன் அடிப்படையிலும் நான் அறிக்கை தாக்கல் செய்தேன். 1ம் பிரதிவாதியிடம் ரூ.42 இலட்சம் செலுத்துவதற்கு வாதியிடம் பணம் இல்லாததாலும் வங்கி கடனை அடைத்ததில் வாதியின் பங்கை செலுத்த வேண்டி வந்தால் தாவா சொத்தின் பெரும்பகுதி பிரதிவாதிக்கு சென்றுவிடும் என்பதால் ரூ.42 இலட்சத்துக்கு சொத்து ஒதுக்க சொல்லி வாதி கேட்டுக்கொண்டார் என்றால் சரியல்ல. சொத்தை விற்று அடைக்கவேண்டியது வங்கி கடன் என்றால் சரி தான். சமரச தீர்ப்பில் சொல்லபட்ட சரத்துக்களை மாற்றுவதற்கு யாருக்கு அதிகாரம் இல்லை என்றால் தவறு. சமரச தீர்ப்பில் சொல்லபட்ட சரத்துக்களை நான் மாற்றவில்லை. ரூ.42 இலட்சம் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்காமல் சமரச தீர்ப்புக்கு எதிராக நான் செயல்பட்டேன் என்றால் தவறு. முதல்நிலை தீர்ப்பாணையில் 2 கடன்களையும் தீர்த்தபிறகு தான் பாகம் பிரிக்க வேண்டும் என்று உள்ளது என்றால் சரி தான். முதல்நிலை தீர்ப்பாணையில் 2 கடன்களையும் தீர்த்தபிறகு தான் பாகம் பிரிக்க வேண்டும் என்று உள்ள நிலையில் கடன் தீர்வதற்கு முன்பே அந்த கடனை ஒரு சொத்தை எடுத்துகொள்பவர்கள் அடைக்க வேண்டியது என்று அறிக்கை சமர்பித்தது தவறு என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u>

சொத்தை இரண்டு பகுதியாக பிரித்து அறிக்கை தாக்கல் செய்து இருக்கிறேன். யாருக்கு எந்த பகுதி சேர வேண்டும் என்று நான் ஒதுக்கவில்லை. ரூ.42 இலட்சத்திற்கு வட்டி கொடுக்க வேண்டுமா என்று வாரண்டில் கண்டிருக்கவில்லை. வாரண்டில் உபய வாதிகளால் தாவா சொத்துக்களை விற்று கடனை செலுத்த வேண்டும் என்றும் தனிபட்ட முறையில் யாரும் கடனை செலுத்த வேண்டும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரி தான்.